IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
OS No.234/2023

| | | |
|---|---|---|
| Name | : Kanchana | **P.W.1** |
| Father/Husband Name | : Umapathy | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 12-02-2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2025.

**குறுக்கு விசாரணை – சத்திய பிராமணம் செய்யப்பட்டார்.**

1. நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்து என்னுடையது என்று உறுதிப்படுத்த தாக்கல் செய்துள்ளேன். வேறு எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் வேறு யாரும் என்னை தொந்தரவு செய்ய கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேஙன். இந்த வழக்கை நான் யாருக்கு எதிராக தாககல் செய்துள்ளேன் என்றால் காத்தவராயன், கன்னியம்மாள், ராணி. பிரதிவாரிகளை வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்னர் தெரியுமா என்றால் தெரியும். பிரதிவாதிகளை எப்படி தெரியும் என்றால் என்னுடைய உறவினர்கள். காத்தவராயன் என்னுடைய மாமா கன்னியம்மாள் மற்றும் ராணி என்னுடைய சித்தி. வழக்கு சொத்து பற்றி எனக்கு முழு விவரம் தெரியுமா என்றால் என்னுடைய அப்பாவிற்கு தான் தெரியும். அடிப்படை விவரங்களும் தெரியாது. வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் காரணை கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண். 23/1.

2. வழக்கு சொத்தின் விஸ்திரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 1 சென்ட். வழக்கு சொத்தின் நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு எழுத படிக்க தெரியாது என்று பிராமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் நான் பள்ளிக்கு சென்றது இல்லை. கையொப்பம் மட்டும் செய்வேன்.

**பிரதிவாதி வழக்கறிஞர் கேட்டுகொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

S/d – N.Anupriya, 12.02.2025.
Taken down by me in open court read over in the witness and admitted by the witness to be correct

DM cum JM/TPR.